# WS 1 for Academic year (2026 - 2027)

**Grade : 6**

**Subject: Tamil ( தமிழ் )**

**Date** ______________

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) ஏற்றத் தாழ்வற்ற …………….. அமைய வேண்டும்.
அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

2) நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ………….. ஆக இருக்கும்.
அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

3) நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………
அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

4) 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………
அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

5) 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………….
அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

6) தாய் மொழியில் படித்தால் ………… அடையலாம்.
அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

7) தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் …………… சுருங்கிவிட்டது.
அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

8) பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது…………
அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும் இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

9) பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………
அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

10) 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ………………..
அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

11) 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………….
அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

12) சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …….
அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

13) "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர்…………
அ) கண்ண தாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

14) 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………..
அ) இடன் + புறம் ஆ) இடது + புறம் இ) இட + புறம் ஈ) இடப் + புறம்

15) 'சித்தம்' என்பதன் பொருள் . ………..
அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

16) நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………
அ) நன் + மாடங்கள். ஆ) நற் + மாடங்கள். இ) நன்மை + மாடங்கள். ஈ) நல் + மாடங்கள்

17) 'கிணறு' என்பதைக் குறிக்கும் சொல் ………..
அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு

18) மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ………….
அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

19) முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………….
அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்

20) நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………
அ) நிலம் + இடையே ஆ) நிலத்தின் + இடையே இ) நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே

21) நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………
அ) நிலாஒளி ஆ) நிலஒளி. இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

22) கதிரவனின் மற்றொரு பெயர் ………………
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

23) கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………
அ) கொங்கு அலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்

24) கழுத்தில் சூடுவது …….
அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

25) 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………
அ) வெண் + குடை ஆ) வெண்மை + குடை இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை

26) 'பொற்கோட்டு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………

அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு

II) கோடிட்ட இடத்தை நிரப்புக:

1) நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ……………
2) தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ……………
3) மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ………. அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

III) சொற்களைத் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக:

1) தனிச்சிறப்பு
2) நாள்தோறும்

IV) கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.

1) உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் …………
2) இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் …………………..
3) ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ……..

V) பிறமொழிக் கலப்பின்றி எழுதுக:

1) எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.
2) பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னார்கள்.

II) பொருள் தருக :

1) வான் – வானம்
2) இணை – சமம்
3) நிருமித்த
4) விளைவு
5) அசதி
6) சுடர் – ஒளி
7) ஆழிப்பெருக்கு – கடல் கோள்
8) ஊழி – நீண்டதொருகாலப்பகுதி
9) மேதினி – உலகம்
10) உள்ளப்பூட்டு – அறிய விரும்பாமை
11) திங்கள்
12) கொங்கு
13) அலர்
14) திகிரி
15) மேரு
16) நாமநீர்
17) அளி
18) காணி
19) சித்தம்

III) எதிர்சொல் தருக:

1) இளமை × முதுமை
2) புகழ் × இகழ்
3) அசதி × சுறுசுறுப்பு
4) ஒளி × இருள்
5) இன்பம் × துன்பம்
6) அமுதம் × விடம்
7) பல × சில
8) முற்றும் × தொடரும்
9) பொய் × மெய்
10) அழிவு × ஆக்கம்

IV) பொருத்துக:

1) விளைவுக்கு – பால்
2) அறிவுக்கு – வேல்
3) இளமைக்கு – நீர்

4) புலவர்க்கு – தோள்
5) முத்துச்சுடர்போல – மாடங்கள்
6) தூய நிறத்தில் – தென்றல்
7) சித்தம் மகிழ்ந்திட – நிலாஒளி

மொழிபெயர்ப்பு:

1) Clockwise
2) Internet
3) Search engine
4) Facebook
5) WhatsApp
6) Anticlockwise
7) Voice search
8) Touch Screen
9) App
10) E-mail
11) Continent
12) Climate
13) Weather

V) குறுவினா:

1) பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
2) நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
3) பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
4) பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?
5) தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
6) செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
7) எத்தகைய சிறப்பை கொண்டது தமிழ் மொழி?
8) தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?
9) நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
10) தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11) மெய்யெழுத்துக்களை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக
12) தமிழ் எழுத்துக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.
13) இயற்கை போற்றத்தக்கது ஏன்?
14) சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

VI) சிறுவினா:

1) இன்பத் தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
2) விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
3) அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?
4) தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.
5) காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
6) பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

VII) பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளி

VIII) திருக்குறள்:
1) செயற்கரிய என தொடங்கும் திருக்குறளை எழுதுக.
2) உலகு என முடியும் திருக்குறளை எழுதுக.